1970 நவம்பர் 30]

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) அதன் பேரில், சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) & (உ): வினாக்களுக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஓடவில்லை என்பது உண்மை. லாரிகள் போகாத அளவுக்கு தடுத்து நிறுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது அல்லவா? எந்த லாரி சொந்த உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது? எந்த அடிப்படையில் சரி செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஓடவில்லை என்பது உண்மையல்ல. வரிவிதிப்பில் வரி உயர்த்தப்பட்டது. அதை லாரி சொந்தக்காரர்கள் எதிர்த்தார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியதில் ஒரு சுமுகமான நிலை ஏற்பட்ட காரணத்தினால் வேலை நிறுத்தம் தடுக்கப்பட்டது.

திரு. கே. விநாயகம்: வரி விதிக்கப்பட்டதன் காரணத்தினால் அதை எதிர்த்து அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னேயே வேலை நிறுத்தம் செய்யப் போவதாக நோட்டீஸ் கொடுத்து 7-ஆம் தேதி வேலை நிறுத்தமும் நடந்தது. அன்று தமிழகம் பூராவும் லாரிகள் ஓடவில்லை. இந்தத் தகவல் அரசாங்கத்திற்கு ஒருவேளை தெரியாது இருக்க சந்தர்ப்பம் உண்டா? ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்யப்பட்டதன் காரணத்தினால்தான் அரசாங்கம் பிறகு அவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்துவைத்தார்கள் என்பது உண்மைதானா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் அதை முழுக்க முழுக்க மறுக்கிறேன். எந்த ஒரு இடத்திலும் ஓடாமல் இருக்கவில்லை. 6-ஆம் தேதி மாலையே அரசாங்கம் ஒரு பரிகாரம் கண்டுவிட்டது. கட்டண உயர்வு அதிகம் என்ற காரணத்தினால் முதலில் 10 ரூபாய் குறைத்தோம். அதையும் ஆட்சேபித்தார்கள். பிறகு மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு சுமுகமான முடிவினை ஏற்படுத்தித் தந்த காரணத்தினால் 7-ஆம் தேதி வேலை நிறுத்தம் நடைபெறவில்லை.

செம்மினிப்பட்டியில் நீர்த்தேக்கம்

* 74 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில், செம்மினிப்பட்டி எனும் இடத்தில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. பி. எஸ். மணியன் : இது போன்ற நீர்த்தேக்கங்கள் ஆய்வு செய்யப்படுகிறபோது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒரு டன்னுக்கு மூவாயிரத்திற்குமேல் செலவானால் அது அன்எக்கனமிகல் என்று கைவிடப்படுகிறது. இதைப் பரிசீலிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தைப் பற்றி சிக்கல் எதுவும் இல்லை. டன்னுக்கு 1,440 ரூபாய் என்ற அடிப்படையில்தான் இது கணக்கிடப்பட்டிருக்கிறது.

திருப்பூர் அணை

* 75 வினா—திரு. சு. **துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 3—12—69-ல் நிர்வாகப் பொறியாளர், கோவைக் கோட்டம், திருப்பூர் அணையைப் பார்வையிட்டாரா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஆழ்ந்த ஆய்வுக்குப்பின் இந்த அணையின் உச்சமட்ட அளவிற்குத் தேங்கும் நீர் இதன் கீழுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர்வதற்குப் போதுமானது என்று தெரிய வருகிறது. எனவே அணையின் உச்ச மட்டத்தை உயர்த்தத் தேவையில்லை.

'குட்டைத் திட்டம்'

* 76 வினா—திரு. **பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனப் பிரிவில் குட்டைத் திட்டம் (Pond Schemes) சில பகுதிகளில் மட்டும் அமுல் நடத்தப்படுகிறதா?

(இ) ஆம் எனில், மாநிலம் முழுவதும் இத்திட்டத்தை விரிவு படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) கோவை, சேலம் மாவட்டங்களிலும் மதுரை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் மட்டும் செயல்பட்டு வந்த "குட்டைத் திட்டம்", தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக எல்லா மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : குட்டைத் திட்டம் என்பது வறட்சிப் பகுதிகளுக்கு மிகவும் உபயோகமான திட்டமாகும். வறட்சிப் பகுதிகள் என்று மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் அறிவித்திருக்கிற பகுதிகளுக்கு எல்லாம் விஸ்தரிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?